DINAMALAR 29 APR 2010

# ஈஷா யோக மையத்தில் சித்ரா பவுர்ணமி திருவிழா

**பேரூர், ஏப். 29 -**

ஈஷா யோக மையத்தில், சித்ரா பவுர்ணமி திருவிழா நேற்று நடந்தது.

சித்ரா பவுர்ணமி திருவிழாவையொட்டி, ஈஷா யோக மையம் வந்த பக்தர்கள், தங்கள் கைகளாலேயே பால், நீரால் தியான லிங்கத்துக்கு அபிஷேகம் செய்தனர். மாலை தியான லிங்க கோவில் முன்புற மைதானத்தில், பக்தி இன்னிசை கச்சேரி நடந்தது.

பேரூர் இளையபட்டம் மருதாசல அடிகள் விழாவை துவக்கி வைத்து பேசுகையில், ''தென்கயிலாய மலையான வெள்ளிங்கிரி மலைக்கென்று தனிச்சிறப்புண்டு. இதன் சிறப்பை பல தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ளனர்,'' என்றார்.

மாலை 5.45 மணியிலிருந்து இரவு 7.00 மணி வரை டாக்டர் சீர்காழி சிவ சிதம்பரத்தின் பக்தி இன்னிசை கச்சேரி நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து தியான லிங்க வளாகத்தைச் சுற்றி லிங்கபைரவி ஊர்வலமும், தேவிக்கு சிறப்பு தீபாராதனைகளும் நடந்தன. இறுதியாக, பிரம்மச்சாரிகளின் ஆரத்தி நடனம் மற்றும் லிங்கபைரவிக்கு சிறப்பு வழிபாடு நடத்தி, அன்னதானம் வழங்கப்பட்டது. இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சி தலைவர் சதானந்தம், தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

★ ஒவ்வொரு ஆண்டும் சித்ரா பவுர்ணமியன்று தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களிலிருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் வெள்ளிங்கரி ஆண்டவரை தரிசித்து வருகின்றனர். அடிவாரத்திலிருந்து மூங்கில் குச்சியுடன் ஏழு மலைகளைக் கடந்து, ஏழாவது மலையில் வீற்றிருக்கும் வெள்ளங்கிரி ஆண்டவரை பயபக்தியுடன் தரிசித்தனர். அதனால் கோவிலில் நேற்று பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.